# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2024 யூலை

## (103) பொருளியல்

அதிகளவான பரீட்சார்த்திகள் அளவு ரீதியில் ஏற்றுக் கொள்ளத்தக்க மட்டத்தில் இந்த பொருளியல் வினாத்தாளுக்கு விடையளித்திருந்ததை அவதானிக்க முடிந்தது. எவ்வாறாயினும், குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகளால் சில வினாக்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட தரத்திற்கு விடைகளை அளிக்க முடியாமையை காணக்கூடியதாக இருந்தது.

மதிப்பீட்டுப் பணியின்போது பரீட்சகர்களால் அவதானிக்கப்பட்ட பிரதான சில தவறுகள் கீழே தரப்பட்டுள்ளன :

## பகுதி A

### வினா இல. 01

இந்தப் பகுதியானது முழுமையான பாடத்திட்டத்தை உள்ளடக்கியவாறு கட்டமைக்கப்பட்டிருந்தது. இல. **1.1** தொடக்கம் **1.10** வரையில் தரப்பட்டிருந்த வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்யுமாறும் இல. **1.11** மற்றும் **1.12** ஆகிய வினாக்களுக்கு தரப்பட்ட இரு விடைகளில் ஒன்றைத் தெரிவு செய்யுமாறும் இல. **1.13** மற்றும் **1.14** ஆகிய வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் சரியானதா, தவறானதா எனக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டதுடன் இல. **1.15** தொடக்கம் **1.20** வரையான வினாக்களுக்கு குறுகிய விடைகளை அளிக்குமாறும் கேட்கப்பட்டது.

அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக புள்ளிகளைப் பெற்றிருந்ததுடன் சில பரீட்சார்த்திகள் வழங்கிய விடைகளில் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டிருந்தன. இதன்போது அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன :

**1.1** இவ்வினா உற்பத்திக் காரணிகளுக்கான வெகுமதி பற்றிக் கேட்டிருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் மூலதனத்திற்கான வெகுமதி ‘‘வட்டி’’ எனச் சரியாக விடையளித்திருந்தனர்.

**1.2** கேள்வியின் குறுக்கு நெகிழ்ச்சி மறைப் பெறுமானமாக இருக்கும்போது சம்பந்தப்பட்ட பொருள் ஒரு நிரப்புப் பொருள் என சரியாக இனங்கண்டிருந்தனர்.

**1.3** இவ்வினா ‘‘சந்தர்ப்பச் செலவு’’ பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்ததுடன் இதற்கு பல பரீட்சார்த்திகளும் சரியாக விடை அளித்திருந்தனர்.

**1.4** நீண்டகால உற்பத்திச் செயன்முறை பற்றிய தவறான கூற்றான உற்பத்திக் காரணிகளை மாறும் மற்றும் நிலையான காரணிகளாகப் பிரிக்கலாம் என்பதை அதிகளவான பரீட்சார்த்திகள் வெற்றிகரமாக இனங்கண்டிருந்தனர். சில பரீட்சார்த்திகள் பாட விடயங்கள் பற்றிய அறிவைக் கொண்டிருந்த போதிலும், ‘‘சரியானதாக அமையாதது’’ போன்ற வகையான வினாக்களுக்கு விடையளிப்பது தொடர்பில் போதிய அறிவைக் கொண்டிருக்கவில்லை.

**1.5** பல பரீட்சார்த்திகள் உற்பத்தி மிகை பற்றிய எண்ணக்கருவைச் சரியாக இனங்கண்டிருந்தனர் அதே வேளை சில பரீட்சார்த்திகள் வெற்றியளிக்காத விடைகளை எழுதியிருந்தனர்.

**1.6** இலங்கை மத்திய வங்கி அறிக்கைக்கு இணங்க, 2023 ஆம் ஆண்டிற்கான பொருளாதார வளர்ச்சி வீதம் 2.5% ஆகக் காணப்பட்டது. சில பரீட்சார்த்திகள் இதனைச் சரியாகக் குறிப்பிட்டிருந்த அதே வேளை பெரும்பாலானவர்கள் திருப்தியற்ற விடைகளையே வழங்கியிருந்தனர். இதற்கான பிரதான காரணமாக இருப்பது நடைமுறை அறிவைப் பெற்றுக் கொள்வதற்கு மத்திய வங்கி அறிக்கை போன்ற பரிந்துரைக்கப்பட்ட புத்தகங்களை வாசிக்காமை ஆகும்.

**1.7** பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கத் தவறியிருந்தனர். இங்கு விலையானது ரூபா 40/- இலிருந்து ரூபா 20/- இற்குக் குறைவடையும்போது கேள்விக் கணியம் 800 இலிருந்து 1,200 அலகுகளாக அதிகரிக்குமாயின், பொருளுக்கான கேள்வியின் விலை நெகிழ்ச்சி யாதாக இருக்குமெனக் கேட்கப்பட்டது.

பொதுவாக, நெகிழ்ச்சி நிலைச் சூத்திரத்தைப் பயன்படுத்தி கேள்வியின் விலை நெகிழ்ச்சியைக் கணிப்பிடும்போது, சரியான விடையாக 1 இருந்த போதிலும், விடை 1 இருக்குமாயின், நெகிழ்ச்சியானது உண்மையாகவே 1 தானா அல்லது அலகு நெகிழ்ச்சியா என்பதைத் தீர்மானிக்க கீழ்வரும் 2 முறைகள் பின்பற்றப்பட முடியும்.

| P | Q | நிலை நெகிழ்ச்சி |
|---|---|---|
| 40 | 800 | $ED = \frac{\Delta Q}{\Delta P} \times \frac{P}{Q}$ |
| 20 | 1,200 | $ED = \frac{800-1200}{40-20} \times \frac{40}{800}$ |
| | | $ED = \frac{-400}{20} \times \frac{40}{800}$ |
| | | $ED = \underline{\underline{1}}$ |

இங்கு, நெகிழ்ச்சி நிலைக் கணிப்பீட்டின்படி நெகிழ்ச்சி நிலை 1 ஆகும். நெகிழ்ச்சியானது உண்மையிலேயே 1 தானா அல்லது அலகு நெகிழ்ச்சியா என்பதைத் தீர்மானிக்க கீழ்வரும் 2 முறைகளில் ஒன்றைப் பின்பற்றுதல் வேண்டும். அலகு நெகிழ்ச்சி என்பது ஒவ்வொரு விலையிலும் கணியம் சமனாக இருப்பதாகும்.

| P | Q | P x Q | |
|---|---|---|---|
| 40 | 800 | 40 x 800 = 32,000 | கணியத்திற்கான பெறுமதிகள் சமனன்று. |
| 20 | 1,200 | 20 x 1,200 = 24,000 | இது அலகு நெகிழ்ச்சியன்று. |

எனவே, 2% வளைவு நெகிழ்ச்சியைக் கணிக்க வேண்டும். பின்னர் ;

$$ED = \frac{\Delta Q}{\Delta P} \times \frac{P1+P2}{Q1+Q2} = \frac{400}{20} \times \frac{40+20}{800+1200} = \underline{0.60}$$

இங்கு, விடை - 0.6 ஆகும். எனவே இது 1 ஐ விடக் குறைவானதாகும். ஆகவே இது நெகிழ்ச்சியற்ற கேள்வியாகும்.

பரீட்சார்த்திகள் நெகிழ்ச்சி நிலைக் கணிப்பீட்டின் மூலம் விடையாக 1 இனைப் பெற்றுக் கொண்டிருப்பினும் அலகு நெகிழ்ச்சியைத் தெரிவு செய்யக்கூடாது. மறுபுறத்தல், அவர்கள் கேள்வியின் வளைவு நெகிழ்ச்சியை கணிப்பிட்டு விடையாக 1 இனைப் பெற்றிருப்பின், அது கேள்வியின் அலகு நெகிழ்ச்சியாகத் தீர்மானிக்கப்பட வேண்டும் அல்லது விடை 1 இனை விடக் குறைவானதாக இருப்பின் அது நெகிழ்ச்சியற்ற கேள்வி எனவும் 1 இனை விட பெரியதாக இருப்பின் கேள்வி நெகிழ்ச்சி எனவும் இனங்காணப்பட வேண்டும்.

**1.8** பல பரீட்சார்த்திகள் கேள்வி வளையியை இடப்பக்கமாக நகர்த்துவதில் தாக்கம் செலுத்தும் காரணிகளாக நிரப்புப் பொருள்களின் விலையில் ஏற்படும் வீழ்ச்சி காணப்படுகிறது என்ற சரியான விடையை வெற்றிகரமாக இனங்கண்டிருந்தனர்.

**1.9** தனியுரிமைச் சந்தை பற்றிய தவறான கூற்றாக, குறுங்கால தனியுரிமைச் சந்தை சாதாரண இலாபங்களைக் கொண்டிருப்பதால் ''குறுங்காலத்தில் சாதாரண இலாபங்கள் மாத்திரம்'' என்பது அமைந்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு சரியான விடையை இனங்கண்டிருந்தனர்.

**1.10** பல பரீட்சார்த்திகள் கட்டற்ற சந்தையில் ''ஆகக்குறைந்த விலை'' விதிக்கப்படுவதன் மூலம் அரசாங்கம் உற்பத்தியாளர்களை பாதுகாக்கலாம் என்பதை சரியாக இனங்கண்டிருந்தனர்.

**1.11** பல பரீட்சார்த்திகள் பணவீக்கம் மற்றும் விலை மட்டங்கள் பேரினப் பொருளியல் ஊடாக வெளிப்படுத்தப்படும் என்பதை வெற்றிகரமாக ஏற்பிசைவு செய்திருந்தனர்.

**1.12** பல பரீட்சார்த்திகள் ஆரம்பப் பயன் உச்சமாகும்போது எல்லைப் பயன் பூச்சியமாகிறது என்பதைச் சரியாக இனங்கண்டிருந்தனர்.

**1.13** எல்லை எண்ணக்கரு உயர் மட்டத்தில் இருந்தமை பற்றிய அறிவு அவதானிக்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் எல்லைக் கிரயமாக, வெளியீடு ஒரு அலகினால் அதிகரிக்கப்படும்போது மொத்தக் கிரயத்திற்கான புதிய சேர்ப்பனவை இனங்கண்டிருந்தனர்.

**1.14** பல பரீட்சார்த்திகள் குறைந்து செல்லும் விளைவு விதியின் ஓர் எடுகோளாக மாறும் காரணி உள்ளீடுகள் ''விகிதசமனாக இல்லை'' என்பதை வெற்றிகரமாக இனங்கண்டிருந்தனர்.

**1.15** அதிகளவான பரீட்சார்த்திகள் ''அரசாங்கம் சந்தையில் எவ்வாறு தலையிடுகிறது'' என்பதற்கான வெற்றிகரமான விடைகளை வழங்கியிருந்தனர்.

**1.16** இவ்வினா தேவைகள் மற்றும் விருப்பங்களுக்கிடையிலான வேறுபாடுகள் பற்றிய அறிவைப் பரீட்சிப்பதற்காகக் கேட்கப்பட்டது. பல பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு வெற்றிகரமாக விடையளித்ததை அவதானிக்க முடிந்தது.

**1.17** கடன் மதிப்பீடு தொடர்பான பரீட்சார்த்திகளின் அறிவு மட்டம் மிகவும் குறைவாக இருந்தது. குறைந்தளவான பரீட்சார்த்திகளே வெற்றிகரமாக விடையளித்திருந்த அதே வேளை பெரும்பாலானவர்கள் தவறான விடைகளையே வழங்கியிருந்தனர்.

**1.18** பல பரீட்சார்த்திகள் தனியுரிமைச் சந்தையுடன் சிலருரிமைச் சந்தை பற்றி குழம்பியிருந்ததால் தவறான விடைகளை அளித்திருந்தனர். சிலருரிமைச் சந்தை பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு இற்றைப்படுத்தப்பட வேண்டும்.

**1.19** நிதி இடையீட்டாளர்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் குறைந்த மட்டத்திலேயே இருந்தது. பல பரீட்சார்த்திகள் இலங்கை மத்திய வங்கியைக்கூட நிதி இடையீட்டாளர் என அடையாளப்படுத்தியிருந்தனர்.

**1.20** நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு திருப்திகரமான மட்டத்தில் காணப்படவில்லை. சில பரீட்சார்த்திகள் நீடித்திருக்கத்தக்க அபிவிருத்தி என்றால் என்ன என்பதை ஏற்பிசைவு செய்திருந்தனர் ஆயினும் நீடித்திருக்கத்தக்க தன்மையின் சமூக அம்சங்களை விளங்கிக் கொண்டிருக்கவில்லை.

## பகுதி B

இப்பகுதியானது நான்கு (04) கட்டாய வினாக்களைக் கொண்டிருந்ததுடன் ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வீதம் ஒதுக்கப்பட்டிருந்தது

### வினா இல. 02

**(a)** பல பரீட்சார்த்திகள் பொருளாதாரப் பண்டங்களின் பண்புகளைச் சரியாக இனங்கண்டதன் மூலம் ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெற்றுக் கொண்டனர்.

**(b)** அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை பல பரீட்சார்த்திகள் இனங்கண்டிருந்த போதிலும், அத்தகைய அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை கலப்புப் பொருளாதாரம் எவ்வாறு தீர்க்கிறது என்பதற்கான முற்றடக்கமான விடைகளை அளித்திருக்கவில்லை. கலப்புப் பொருளாதாரமொன்று அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை எவ்வாறு தீர்க்கிறது என்பது பற்றிய அறிவைப் பரீட்சார்த்திகள் கொண்டிருக்க வேண்டும்.

**(c)** பல பரீட்சார்த்திகள் விலைக்கும் கேள்விக் கணியத்திறகுமிடையிலான நேர்மாறு தொடர்பினை விபரித்திருந்தனர். ஆனால், அதற்கான காரணங்களை விளக்கியிருக்கவில்லை. பரீட்சார்த்திகள் கேள்வி விதிக்கான காரணங்களை விபரிப்பதில் சரியான அறிவைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

### வினா இல. 03

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் சமநிலை விலை மற்றும் கணியத்தைச் சரியாகக் கணிப்பிட்டு மொத்தப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**(b)** சில பரீட்சார்த்திகள் ''கேள்வியின் விலை நெகிழ்ச்சியைத் தீர்மானிக்கின்ற காரணிகளை'' இனங்கண்டு அதற்கான உயர்ந்தளவு புள்ளிகளை வெற்றிகரமாகப் பெற்றிருந்தனர். ஆனால் அவர்கள் ''கேள்வியைத் தீர்மானிப்பதை''ப் பாதிக்கும் காரணிகள் பற்றி பிழையாகக் குறிப்பிட்டிருந்தனர்.

### வினா இல. 04

**(a)** சில பரீட்சார்த்திகள் ''பணத்திற்கான கேள்வி'' இற்கான நோக்கமாக கொடுக்கல் வாங்கல், முன்னெச்சரிக்கை மற்றும் ஊகம் என்றவாறு வெற்றிகரமாக இனங்கண்டிருந்தனர். அதே வேளை வேறு சில பரீட்சார்த்திகள் வினாவைப் பிழையாக விளங்கியிருந்ததுடன் பணத்திற்கான தொழிற்பாடுகளை விடையாக எழுதியிருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் இலாபத்தன்மையையும் திரவத்தன்மையையும் சரியாக இனங்கண்டிருந்த அதே வேளை, பலர் அவ்விரு எண்ணக்கருக்களுக்கும் இடையிலான தொடர்பை விளக்குவதற்குத் தவறியிருந்தனர். அதாவது, ''இலாபத்தன்மை அதிகரிக்கும்போது, திரவத்தன்மை குறைவடைகிறது மற்றும் இலாபத்தன்மை குறைவடையும்போது திரவத்தன்மை அதிகரிக்கிறது'' என்பதை விளக்கத் தவறியிருந்தனர். வேறு விதமாகக் கூறின், பரீட்சார்த்திகள் இவ்விரு எண்ணக்கருக்களுக்கும் இடையிலான நேர்மாறு தொடர்பை இனங்காணவில்லை.

அதிகளவான பரீட்சார்த்திகள் ‘‘இலாபத்தன்மை மற்றும் திரவத்தன்மை’’ ஆகியவற்றை வரையறுத்திருந்த போதிலும், அவ்விரு எண்ணக்கருக்களுக்கும் இடையிலான தொடர்பை இனங்காணத் தவறியிருந்தனர்.

**(c)** இவ்வினா மத்திய வங்கியின் தரம்சார் பணக் கொள்கைக் கருவிகள் பற்றிக் கேட்டிருந்தது. ஆனால் அதிகளவான பரீட்சார்த்திகள் ‘‘அளவுசார் பணக் கொள்கைக் கருவிகளை’’ விடையாக எழுதியிருந்தனர். பரீட்சார்த்திகள் அளவுசார் மற்றும் தரம்சார் பணக் கொள்கை கருவிகள் / நடவடிக்கைகள் என்றால் என்ன என்பது பற்றிய தெளிவான புரிதலைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

## வினா இல. 05

**(a)** சில பரீட்சார்த்திகள் ஒப்பீட்டு நயக் கோட்பாட்டின் எடுகோள்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டிருந்தனர். அதே வேளை சில பரீட்சார்த்திகள் தவறாக ‘‘உற்பத்திச் சாத்திய வளையி’’யின் எடுகோள்களை எழுதியிருந்தனர்.

**(b)** இவ்வினா நாட்டின் பெயர்களை **A, B** எனக் குறிப்பிட்டதற்குப் பதிலாக ஏதாவது பெயர்களைக் குறிப்பிட்டிருப்பின் அதிகளவு வெற்றிகரமான விடைகளைப் பெற்றிருக்க முடியும்.

**(c)** அமெரிக்க டொலருக்கு எதிராக இலங்கை ரூபா தேய்மானமடைவதன் பாதகமான விளைவுகளைத் தணிப்பதற்காக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றி இங்கு பரீட்சிக்கப்பட்டது. இவ்வினா வெறும் கோட்பாட்டு ரீதியான வினாவாக அல்லாமல் நடப்புநிலை / சமகால தலைப்பொன்றாக உள்ளதால் பல பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு புள்ளிகளைப் பெறக்கூடியதாக இருந்தது.

# பகுதி C

## வினா இல. 06

**(a)** அதிகளவான பரீட்சார்த்திகள் வர்த்தகச் சுழற்சி வரிப்படத்தை வரைந்து அதன் பல்வேறு கட்டங்களையும் வெற்றிகரமாகப் பெயரிட்டிருந்தனர். ஆனால் வினாவில் எதிர்பார்க்கப்பட்டதைப் போல பரீட்சார்த்திகளால் அவற்றை விளக்க போதிய கவனம் செலுத்தப்படவில்லை. எனவே, பரீட்சார்த்திகள் ஒதுக்கப்பட்ட புள்ளிகளைப் பெறுவதற்குத் தவறியிருந்தனர்.

**(b)** அதிகளவான பரீட்சார்த்திகள் **(a)** மொத்த உள்நாட்டுச் செலவினம் **(b)** மொத்த உள்நாட்டு உற்பத்தி **(c)** மொத்த தேசிய வருமானம் ஆகியவற்றை சந்தை விலையில் சரியாகக் கணிப்பிட்டிருந்தனர். சில பரீட்சார்த்திகளின் விடைகள் கணிப்பீட்டு வழு காரணமாக சரியாக அமையவில்லை.

**(c)** அதிகளவான பரீட்சார்த்திகள் எண்ணக்கருக்களுக்கு இடையிலான வேறுபாட்டைப் புரிந்து கொள்வதற்குத் தவறியிருந்தனர். ஆனால் மொத்த உள்நாட்டு வருமானம் மற்றும் மொத்த தேசிய வருமானம் ஆகியவற்றின் எண்ணக்கருக்களைப் பெற்றிருந்தனர். பரீட்சார்த்திகள் இரு எண்ணக்கருக்களுக்கும் இடையேயான வேறுபாட்டைச் சரியாகக் குறிப்பிட்டிருக்கவில்லை.

**(d)** பலர் நிதிக் கொள்கையை வரையறை செய்திருந்தனர் ஆயினும் நிதிக் கொள்கையானது வணிகங்களை எவ்வாறு பாதிக்கின்றது என்பதை விளக்காததால் முழுப் புள்ளிகளையும் பெற முடியாது போயிருந்ததை அவதானிக்க முடிந்தது.

- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றல் மட்டத்தை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற் கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகவும் பூரணமாகவும் படிப்பதுடன் புதிய பாட விடயங்கள் மீது அதிக கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** மிகக் கவனத்துடன் வினாவை வாசிப்பதுடன், நேரடி விடைகள் எதிர்பார்க்கப்படும் சந்தர்ப்பத்தில் தேவையற்ற விபரிப்புக்களையோ விபரங்களையோ எழுத வேண்டாம்.

**(3)** வரைவிலக்கணங்களுடன்கூடிய செயல் வினைச்சொல் செவ்வை நிரல் வினாத்தாளுடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்கள் தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு செயல் வினைச் சொல்லைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல் வரைவிலக்கணத்தின் அடிப்படையில் வினாக்களுக்கு விடைளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் ஏடு, புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், சஞ்சிகைகள், மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை வாசிக்கவும்.

**(5)** வரைபுகளுக்குச் சரியாகப் பெயரிட்டு விபரிப்பதில் கவனம் செலுத்தவும்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்கள் துல்லியமாக இடப்படுதல் வேண்டும்.

**(7)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**(8)** கடந்தகால வினாத்தாள்களைச் செய்து பார்த்து, அவற்றை பரிந்துரைக்கப்பட்ட விடைகளுடன் ஒப்பிட்டுப் பார்ப்பதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(9)** சரியான நேர முகாமையில் கவனம் செலுத்தவும்.

**(10)** முன்னாயத்தத்துடனும் பரீட்சையை வெற்றிகொள்ளும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

- * * * -